Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 247

வெள்ளிக்கிழமை
01 ஓகஸ்ட் 2025

ஆடி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## எரிபொருள் விலையில் மாற்றமில்லை

கொழும்பு, ஓக. 1
எரிபொருள் விலைகளில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. 11

✦ ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட,
✦ துணைவேந்தர் ரவீந்திரநாத்,
✦ மாணவன் பார்த்தீபன்

ஆகியோரின் கதியை அறிய




# தம்பிலுவில் இந்துமயானத்தில் அகழ்வுப்பணி நேற்று ஆரம்பம்!

### பிள்ளையான், இனியபாரதி கும்பலின் வெறியாட்டம் வெளிப்படுமா?

திருகோணமலை, ஓகஸ்ட் 1
பிள்ளையான் குழுவைச் சேர்ந்த இனியபாரதியாலும், அவரது சகாக்களாலும் கடத்தப்பட்டு காணாமற்போன 18 வயது மாணவன் பார்த்தீபன், முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் சு.ரவீந்திரநாத், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் இந்து மயானத்தில் அகழ்வுப் பணிகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகின. 11

## மூன்று என்புத்தொகுதிகள் செம்மணியில் நேற்று மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 1
அரியாலை செம்மணிப் புதைகுழியில் இருந்து நேற்று மேலும் மூன்று மனித என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. புதிதாக அடையாளம் 09

## செம்மணிப் புதைகுழியில் ஞாயிறு, திங்கள் 'ஸ்கான்'

யாழ்ப்பாணம், ஓக. 1
அரியாலை - செம்மணி மனிதப் புதைகுழியில், தரையை ஊடுருவும் ராடர் மூலம், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் திங்கட்கிழமையும் ஸ்கான் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. செம்மணி மனிதப் புதைகுழி 09

இவ்வருட அரையாண்டில்

## யாழ். மாவட்டத்தில் மட்டும் 580 பால்நிலை வன்முறைகள்

யாழ்ப்பாணம், ஓக. 1
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ்வருட முதல் அரையாண்டில் 580 பால்நிலை வன்முறைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகக் கேட்போர் 11

விடுதலைப்புலிகளின்

## ஆயுதங்களைத் தேடிய அகழ்வுப்பணி தோல்வி

கிளிநொச்சி, ஓக. 1
கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணி தோல்வியில் முடிந்துள்ளது. 11

24 மணிநேரமும்

## ஊழல்வாதிகளின் கைதுகளை எதிர்பார்க்கின்றனர் மக்கள்

### அமைச்சர் விஜித ஹேரத் வெளிப்படை



கொழும்பு, ஓக. 1
ஊழல்வாதிகள் ஒட்டுமொத்தமாகக் கைது செய்யப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். இதற்காக அவர்கள் 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர் - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் 11



## டிப்பர் மோதித் தள்ளியதில் இளம்பெண் பரிதாபச் சாவு!

### கிளிநொச்சியில் சோகம்



கிளிநொச்சி, ஓக. 1
கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற டிப்பர் விபத்தில் பட்டதாரிப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 11

## வத்திராயனில் 103 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 1
வடமராட்சி - வத்திராயன் கடற்பரப்பில் நேற்று 103 கிலோ கேரளக் கஞ்சா விசேட 11

## மூதாட்டியின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 1
நீர்வேலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மூதாட்டியொருவர் கிணற்றில் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

### முச்சந்தி முரளி

'பேசாமல் இயமன் எருமைக்கு பெஞ்சன் குத்திட்டு டிப்பரை தன்ர வாகனமாக்கலாம் கண்டியளோ'

## பரு. நகரசபைச் சாரதி திடீர் சுகவீனமுற்றுப் பலி



யாழ்ப்பாணம், ஓக. 1
பருத்தித்துறை நகரசபையில் சாரதியாகக் கடமையாற்றிவந்த குடும்பத்தலைவர் திடீர் சுகவீனமுற்று நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். தம்பசிட்டி வீதி பருத்தித் 09

## அரசியற்கைதிகளின் பிரச்சினையை சட்டத்துக்கு உட்பட்டுத் தீர்ப்போம்!

### நீதியமைச்சர் ஹர்ஷண தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 1
அரசியற்கைதிகளின் பிரச்சினைகளை என் காதுகளால் கேட்கவில்லை. மாறாக இதயத்தால் கேட்கின்றேன். சட்ட கட்டமைப்புக்குள் இருந்து இந்தப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 4149 | ஆங்கில எழுத்து: I | வெற்றி இலக்கங்கள்: 04 21 42 43 | விசேட எழுத்து: I

**ஹந்தஹன ராசி சுப பலன்** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 1216 | வெற்றி இலக்கினம்: விருச்சிகம் | வெற்றி இலக்கங்கள்: 14 55 56 61

**NLB ஜய** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 0175 | ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கங்கள்: 2 3 0 0

**மெகா பவர்** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 2255 | ஆங்கில எழுத்து: C | சுப்பர் இலக்கம்: 13 | வெற்றி இலக்கங்கள்: 09 28 44 62

**மஹஜன சம்பத** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 5907 | ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கங்கள்: 6 2 1 1 3 9

**தன நிதானய** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 1937 | ஆங்கில எழுத்து: O | வெற்றி இலக்கங்கள்: 26 29 42 68 | விசேட எழுத்து: O

**அத சம்பத** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 0482 | ஆங்கில எழுத்து: Z | வெற்றி இலக்கங்கள்: 1 1 3 9

**சுப தவசக்** — திகதி: 31.07.2025 | சீட்டிழுப்பு இலக்கம்: 0023 | வெற்றி இலக்கினம்: ரிஷபம் | வெற்றி இலக்கங்கள்: 04 40 41 47

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் பகிர்வதில் தயக்கம்

## தவிசாளர் நிரோஷ் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக.1**

**உள்ளூராட்சி மன்றங்களின் பணிப்பரப்புகளை ஏனைய நாடுகள் போல் முன்னெடுக்க அதிகாரங்கள் வலுப்படுத்தப்படவேண்டும். மாறாக அரசாங்கம் மத்தியை நோக்கி அதிகாரங்களைக் குவிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றது .**

இவ்வாறு சுவிட்சர்லாந்து தூதுவருடனான சந்திப்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிதாக உள்ளூராட்சிமன்றங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் வகையில் சர்வதேச அனுபவங்களைப் பெற்று மத்திய அரசாங்கம் ஒத்துழைப்பினை வழங்கவேண்டும். தமிழ் மக்களில் பெருமளவானோர் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் ஊடான முதலீடுகளைப் பெற்று தொழிற்றுறை ரீதியிலான அபிவிருத்திகளை போரினால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளில் மேற்கொள்ளவேண்டும். எனினும் அரசு தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட இனப் படுகொலை உள்ளிட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறலையோ நீதியையோ நிலைநிறுத்தாமை காரணமாக புலம்பெயர் முதலீட்டாளர்கள் தாயகம் திரும்ப அஞ்சு கின்றனர் - என்றார். (ச-20)

**சுபிரி தன சம்பத** — திகதி: 31.07.2025 | தினம்: வியாழக்கிழமை | வெற்றி வாரம்: 0615 | ஆங்கில எழுத்து: K | வெற்றி இலக்கம்: 1 7 5 8 1 0

**Super Ball** DLB — திகதி: 31.07.2025 | தினம்: வியாழக்கிழமை | சீட்டிழுப்பு வாரம்: 2881 | ஆங்கில எழுத்து: G | வெற்றி இலக்கம்: 03 06 11 19

**சனிதா** DLB — திகதி: 31.07.2025 | தினம்: வியாழக்கிழமை | ஆங்கில எழுத்து: F | வெற்றி இலக்கம்: 59 61 73 78 | வெற்றி வாரம்: 5042

**SASIRI** DLB — திகதி: 31.07.2025 | தினம்: வியாழக்கிழமை | வெற்றி வாரம்: 0737 | வெற்றி இலக்கம்: 07 08 14

**லக்ன ராசி** DLB — திகதி: 31.07.2025 | தினம்: வியாழக்கிழமை | தனுசு | வெற்றி இலக்கம்: 04 10 32 38 | சீட்டிழுப்பு வாரம்: 4593

**KAPRUKA** DLB — திகதி: 31.07.2025 | தினம்: வியாழக்கிழமை | ஆங்கில எழுத்து: Z | சுப்பர் இலக்கம்: 16 | வெற்றி இலக்கம்: 26 40 63 70 | வெற்றி வாரம்: 2057

**அத கோடிபதி** DLB — திகதி: 31.07.2025 | தினம்: வியாழக்கிழமை | ஆங்கில எழுத்து: O | வெற்றி இலக்கம்: 05 21 64 73 | வெற்றி வாரம்: 2707

# இராஜதந்திர அரசியல் மஹிந்தவிடம் கற்கவும்

## மொட்டுக்கட்சி அறிவுரை

கொழும்பு, ஓக.1

போர்க்காலத்தில் பலம்பொருந்திய நாடுகளுடன் இராஜதந்திர சமரில் ஈடுபட்ட தலைவர்தான் மஹிந்த ராஜபக்ச. எனவே, இராஜதந்திரம் என்றால் என்ன வென்பது தொடர்பில் ஜனாதிபதி அநுர, மஹிந்த விடம் கேட்டுக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

மொட்டுக்கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்க்காலத்தில் மஹிந்த ராஜபக்ச பல இராஜதந்திர பிரச்சினைகளை எதிர்கொண்டார். அப்படியான பிரச்சினைகள் தற்போது வருமானால் இந்த அரசு நடுங்கிவிடும். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மஹிந்த எடுத்த முடிவால் உலகில் பலம்பொருந்திய நாடுகள் ஓரணியில் திரண்டன. அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன்தான் மஹிந்த ராஜபக்ச இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டார்.

எனவே, நேரம் கிடைக்கும்பட்சத்தில், மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்து இராஜதந்திர மற்றும் அரசியல் தொடர்பில் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

# 6 மாதங்களில் கையூட்டுப் பெற்ற 34 பேர் கைது!

கொழும்பு, ஓக. 1

இலங்கையில் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கையூட்டுப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் 34 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கையூட்டல், ஊழல் மற்றும் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் இதுவரையான காலப்பகுதியில் ஊழல் மோசடிகள் தொடர்பில் 3 ஆயிரத்து 22 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, இந்த ஆண்டு முதல் 6 மாதங்களில்போதைப்பொருள் குற்றச்செயல்களில் தொடர்புடைய ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 913 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் குற்றங்களுக்குப் பயன்படுகிறதாம்!

## ரி.ஐ.டி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 1

விடுதலைப்புலிகளால் வடக்கு மாகாணத்தில் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் தெற்கில் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதாக சந்தேகம் நிலவுவதால், அது தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பயங்கரவாத விசாரணைப்பிரிவு கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேனவுக்கு அறிவித்துள்ளது.

86 உயிர்க்குண்டுகள், 321 ரி-56 ரக ரவைகள், 3 பக்கவாட்டு ஆயுத ரவைகள் மற்றும் 5 ஆயிரத்து 600 போதைமாத்திரைகள் ஆகியவற்றுடன் கைதுசெய்யப்பட்ட ஒருவர் உட்பட வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் மூன்று சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்திய போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. தெற்கில் ஒரு குற்றச்செயலைச் செய்வதற்காக வவுனியாப் பிரதேசத்திலிருந்து ரி-56 ரகத் துப்பாக்கியுடன் வந்த ஒருவரை கடந்த 21ஆம் திகதி பொலிஸார் கிரத்கொடப் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்ததாகவும், அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போதே இந்த மூன்று சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர் எனவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியது.

இதனைக் கருத்திற்கொண்ட நீதிவான், மூன்று சந்தேகநபர்களையும் 90 நாள்கள் தடுத்துவைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார். (ச-இ)

# இந்தியாவுடன் டிஜிற்றல் ஒப்பந்தம் இரத்துச்செய்யக்கோரி மனு தாக்கல்

கொழும்பு, ஓக. 1

இலங்கையர்களுக்கு டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர் அமானி ரிஷாத் ஹமீத் தாக்கல் செய்த இந்த மனுவில், ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை உட்பட 27 நபர்கள் பிரதிவாதிகளாகப்பெயரிடப்பட்டுள்ளனர்.

இது இலங்கையின் இறையாண்மை, தேசிய பொருளாதாரம், தேசியப் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தில் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்திற்குத் தலையிட வாய்ப்பளிக்கும் என்றும், இது அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயற்பாடு என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட பெருந்திருவிழாவின் இரண்டாம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-41-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.1

புளியங்கூடல் கதிர்காமக் கதிர் வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச்சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 5.30மணிக்குச் சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

ஆலயப் பிரதம குருக்கள் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், செ.த.குமரன், ச.முகுந்தன், க.கைலநாதன் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் ச. நவநீதன், க.கயிலைவாசன், நித்திய பாபுதரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச-41)

# தெய்வீக அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.1

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகக்கலை அர்ச்சனை நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை இணுவையூர் ஞான ஏந்தல் மா. ந. பரமேஸ்வரன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், திருமதி. ஹங்கானந்தி விஜயனின் பண்ணிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)

# 'கலாரசனா' சங்கமம் கோடை முதல் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.1

'கலாரசனா சங்கமம்கோடை' முதல் நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நுண்கலைமாணி ஜெ.மதுஷிகன் குரலிசை நிகழ்வில் ஞானவேல் வசந் மிருதங்கத்தையும், இரா.நிரோசன் வயலினையும், வி.ராகவன் கெஞ்சிராவையும் இசைக்கவுள்ளனர்.

நுண்கலைமாணி ஆதித்யா ஜெயபாலனின் நெறியாள்கையில் 'நர்த்தன மாலை' நடன நிகழ்வில் அணிசெய் கலைஞர்களாக அ.அமிர்தசிந்துஜன், சி.திலக்ஷன் ஆகியோர் குரலிசை வழங்கவுள்ளனர். ம.லோகேந்திரன் மிருதங்கத்தையும், இரா. நிரோசன் வயலினையும், சி.யூட் புல்லாங்குழலையும், ம.மனுசங்கர் இசைப்பலகையையும் இசைக்கவுள்ளனர். (ச-25)

# தெய்வீகத் திருக்கூட்டத்தொடர் நான்காம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.1

நல்லூர் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத்தொடரின் நான்காம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை, மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8ஆவது குரு பீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, காரைநகர், புகலி ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோயில் பிரதம குரு வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் தலைமையில், இத்திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவின் ஊரெழு சிவபூரணி முத்தமிழ்மன்ற அறநெறிப்பாடசாலை, உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அறநெறிப்பாடசாலை, உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை, ஊரெழு ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் பராசக்தி அறநெறிப்பாடசாலை, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலைநிகழ்வுகளும், கிளிநொச்சி மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

இதன்போது இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களக் கோப்பாய்ப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெயமதி வரவேற்புரையையும், உரும்பிராய் பராசக்தி அம்மன் அறநெறிப்பாடசாலை ஆசிரியர் திருமதி அஜிதன் கவிதாநந்தினி நன்றியுரையும் ஆற்றவுள்ளனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நான்காம் திருவிழா)





## நல்லூரான் சிறப்பம்சம்

### ஐயன் துணையிருக்க அஞ்சுவதேன்?

**எடுப்பு**

நெஞ்சமெங்கும் குகனின் செந்தாளே மன
நினைவும் வடிவழகு கந்தவேளே
(நெஞ்சம்)

**தொடுப்பு**

சஞ்சலங்கள் விலகும் இந்தநாளே – நல்லூர்ச்
சந்நிதியில் நாளும் இன்பநாளே
(நெஞ்சம்)

**முடிப்பு I**

அஞ்சேல் என அபயம் அளிப்பவனே – மிக
அருளும் நல்லூர்ச் சரவணபவனே
கொஞ்சமன்று அவனின் கொடை மாட்சி– குகனைக்
கும்பிடுவோர் மனையில் அருள் ஆட்சி
(நெஞ்சம்)

**முடிப்பு II**

தஞ்சமென அவனின் சந்நிதியில் – வந்து
சரண்புகுந்தால் நல்லையம் பதியில்
கொஞ்சு தமிழ்க்குமரன் குடியிருக்கும் நல்லூர்க்
கோவிலிலே வாழ்வின் வழியிருக்கும்
(நெஞ்சம்)

**முடிப்பு III**

விஞ்சியுயர் புகழின் வேந்தனவன் தனை
வேண்டி நின்றார் வினையின் காலனவன்
அஞ்சுவதேன் மனமே அவனியிலே – ஐயன்
அருள் பெறுவாய் நீ அனுதினமே
(நெஞ்சம்)

**ஆனையூர்க்கவிராயர்**

### நீதி தா முருகா

தமிழரின் தெய்வமே முருகா
தரணியில் எமைக் காக்கும் தேவா
செம்மணியில் சித்துபாத்தி
செல்வந்தரும் வாசலிலே
உன் அழகு வளைவருகே
உத்தமனே நீயும் கொஞ்சம் கேளாய்
வெட்ட வெட்ட எலும்புக்கூடோ
வெறிதாய் நூற்றுக்கு மேலப்பா
கொடூரம் எல்லாம் யார் செயலோ
கொடுமையேனோ சொல்லப்பா
நல்லை நகரில் வீற்றிருக்கும்
நம்மைக் காக்கும் தெய்வமன்றோ
யாரிடத்தில் நாம் சொல்லியழ
யார்தான் எம்மைப் பார்த்திடுவார்
நீதான் எம்மைக் காக்கவேண்டும்
நீதியையும் நிலைநாட்டவேண்டும்

**நா.சண்முகரத்தினம்,**
ஓய்வுநிலை அதிபர்,
புத்தூர்.

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஓக.1

நாவற்குழி மேற்கு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத்தெரிவும் அறிவொளிமன்றத் தலைவர் சு.கணேசானந்தன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நாவற்குழி மேற்கில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கைதடி கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் கு.கோகுலன், மதிப்புறு அழைப்பாளராக ஜே/294 நாவற்குழி மேற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஜே 294 நாவற்குழி மேற்கு கிராம அலுவலர், கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தலைவராக சு.கணேசானந்தன், செயலாளராக வீ.யோகேஸ்வரன், பொருளாளராக வே.ஜெகதீஸ்வரன், உபதலைவராக வை.சுரேஸ், உபசெயலாளராக ரா.குலசகி, உறுப்பினர்களாக செ.சதாசிவமூர்த்தி மற்றும் த.சுதாகர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ச-41-159)

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/C1/2025/12 | Construction of Lift Room (02 Nos.) at Faculty of Science, University of Jaffna | 9.11 | 60 | C8 or above | Rs. 100,000.00 16.12.2025 | Rs. 2,500.00 |
| 2 | YA/CWP/RE/C1/2025/13 | Supply and Installation of Air Conditioning System and Power supply at Engineering Technology Staff Room, Faculty of Technology, University of Jaffna, Kilinochchi | 5.93 | 30 | C8 or above | Rs. 60,000.00 16.12.2025 | Rs. 2,500.00 |
| 3 | YA/CWP/RE/C1/2025/14 | Supply and Installation of Air Conditioning System and Power supply at Bio System Technology Staff Room, Faculty of Technology, University of Jaffna, Kilinochchi | 4.01 | 30 | C8 or above | Rs. 45,000.00 16.12.2025 | Rs. 2,500.00 |
| 4 | YA/CWP/RE/C1/2025/15 | Rectification of Existing Air Conditioning system and power supply at Physics Laboratory, Faculty of Technology, University of Jaffna, Kilinochchi | 1.60 | 30 | C9 or above | Rs. 20,000.00 16.12.2025 | Rs. 1,500.00 |
| 5 | YA/CWP/RE/C1/2025/16 | Rehabilitation of Male Hostel Canteen Stage II, at Ariviyalnagar, Kilinochchi Premises, University of Jaffna | 6.54 | 90 | C8 or above | Rs. 70,000.00 16.12.2025 | Rs. 2,500.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
   Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 1st August 2025 until 18th August 2025 from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10.00 hrs on the 19th August, 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 19th August, 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 91 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 14th August, 2025 for the bid No. 01 and at the Engineering Service Division, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi at 10.00 hrs on the 13th June, 2025 for the bid No. 02, 03, 04 and 05.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna,
31.07.2025

## மரண அறிவித்தல்




### பிறிஞ்சிப்பிள்ளை அமிர்தநாதர்


சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிறிஞ்சிப் பிள்ளை அமிர்தநாதர் அவர்கள் நேற்று (31.07.2025) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பிறிஞ்சிப்பிள்ளை - றோசமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி அந்தோனிப் பிள்ளை, அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், குளோறியா (ஜிரோ) அவர்களின் பாசமிகு கணவனும், காலஞ்சென்ற திரேசா புஸ்பம், யோசப், மரியாநாயகம், றேமேந்துப்பிள்ளை மற்றும் ஆரோக்கியநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கென்சிங்சன் டயஸ், வின்ஸ்ரன் டினேஸ், அருட்பணி சியான்ஸ்ரன் ஜெனிஸ் (OMI) காலஞ்சென்ற லொசின்ரன் லொய்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிதர்ஷினி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்றியா, தர்ஷா, அக்ஷ்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலிக்காக இன்று (01.08.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
சில்லாலை 077 772 7087

## 18 ஆண்டுகள் உம் நினைவுடன்




### சகாதேவன் நிலக்ஷன்

என்றும் உம் நினைவுகளுடன்
டடா, அண்ணா, அண்ணி,
நிலாஷன்.
செல்வநிலாவகம்
47, புகையிரத நிலைய வீதி, கொக்குவில்.

(CS 3735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளகப் பொறிமுறையால் நீதி கிடைக்க வாய்ப்பில்லை

## காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் ஆணித்தரம்

வவுனியா, ஓக. 1


**இனப்படுகொலை இடம்பெற்ற நாட்டில் அதனை மேற்கொண்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கு உள்ளகப் பொறிமுறை எப்படி சாத்தியமான முறையில் வழிவகுக்கும். உள்ளகப் பொறிமுறையால் ஒருபோதும் நீதி கிடைக்கப்போவதில்லை என்று வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆர்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்தநாட்டில் குற்றம் இழைத்தவர்களுக்கு உயர்பதவிகள் வழங்கிக் கௌரவிக்கும் நிலையே தொடர்ச்சியாக இருக்கின்றது. அத்துடன் தாயகப் பகுதிகளில் தற்போது வெளிப்படும் மனிதப் புதைகுழிகள் இங்கு இனப்படுகொலை நடந்துள்ளது என்பதை உணர்த்தி நிற்கின்றன.

இனப்படுகொலை நடந்துள்ளது என்பதற்குச் சாட்சியமாகவே இந்தப் புதைகுழிகள் வெளிப்படுகின்றன. இவற்றைச் செய்தது யார்? என்ற உண்மையைச்சர்வதேசவிசாரணை ஒன்றின்மூலமே அறிய முடியும். தொடர்ச்சியாக நீதி கோரிப் போராடிவரும் நாம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் சர்வதேச விசாரணையினை வலியுறுத்தி வடக்கு- கிழக்குத் தழுவிய ரீதியில் மாபெரும் போராட்டம் ஒன்றையும் முன்னெடுக்கவுள்ளோம்- என்றனர். (ச-110)

# வெப்பம் அதிகரிப்பு



கொழும்பு, ஓக. 1

தென், கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்கள் மற்றும் மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பம் அதிகரித்துக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. எனவே மக்கள் அதிகளவு நீரை அருந்துவதோடு பணி செய்யும் இடங்களில் முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வு எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# காலியில் துப்பாக்கிச்சூடு; இளைஞர் பலி



கொழும்பு, ஓக. 1

காலி கொஸ்கொடப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் குறித்து கொஸ்கொடப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)



# இராணுவத் தளபதிக்கு ஒருவருட சேவை நீடிப்பு

கொழும்பு, ஓக. 1

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவுக்கு மேலும் ஒரு வருடம் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சேவை நீடிப்பை ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்க வழங்கியுள்ளார்.

லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ 2024 டிசெம்பர் 31ஆம் திகதி முதல் இலங்கை இராணுவத்தின் 25ஆவது தளபதியாக நியமிக்கப்பட்டார்.

முன்னர், லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ இலங்கை இராணுவத்தின் பிரதிப் பணிக்குழாம் அதிகாரியாகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# எள்ளங்குளம் மயானத்திலிருந்து இராணுவமே வெளியேறுக!

## *கரவெட்டிப் பிரதேசசபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஓக.1

செம்மணி மனிதப்புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும், ஐ.நா. பேரவையின் நிபுணர் குழு செம்மணிப் புதைகுழி அகழ்வை மேற்பார்வை செய்யவேண்டும் எனவும் எள்ளங் குளம் பகுதியில் இராணுத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் 3 ஏக்கருக்கு அதிகமான காணியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி பொதுமக்களிடம் கையளிக்கவேண்டும் உள்ளிட்ட 11 தீர்மானங்கள் கரவெட்டிப் பிரதேசசபையின் மூன்றாவது அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாணவர்களுக்குக் கனரக வாகனங்களால் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பதற்கு பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரமாகிய காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையிலும் பாடசாலை முடியும் நேரமாகிய பிற்பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரையிலும் எமது சபைக்குட்பட்ட பாடசாலைகள் அமைந்துள்ள வீதிகளினால் கனரக வாகனங்கள் பயணிப்பதை தடைசெய்யவேண்டும்.

"சுத்தமான பிரதேசத்தை உருவாக்குவோம்" என்ற எண்ணக் கருவிற்கு அமைய எமது சபைக்குட்பட்ட வீதியோரங்களில் காணப்படும் பற்றைகள் புற்களை அகற்றுதல், மலக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக கட்டமைப்பொன்றை நிறுவுதல் போன்றனவும் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. (ச-100)



# புதினம் தெரியுமோ?

## கல்போட்டு மண்போட்டு முன் தோன்றும் கட்டடங்கள்

**கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்தகுடி என்டதை எங்கடையாக்கள் இன்னும் மறக்கேலை. அதால தான் இப்ப கன இடங்களில கல்லையும் மண்ணையும் வைச்சே வயல்காணியளை எல்லாம் மேட்டுக்காணியளா மாத்திக்கொண்டிருக்கினம். நெல்லும் கத்தரியும் வெண்டியும் விளைஞ்ச காணியளுக்க இப்ப டிசைன் டிசைனா கடையளும், வீடுகளும் எழும்பிக்கொண்டிருக்குது. வீட்டில ஓடு உடைஞ்சு மாத்தினால்கூட மோப்பம் பிடிச்சு, 'எங்களிட்டக் கேட்டு பெர்மிசன் எடுத்தெல்லோ அதை மாத்தியிருக்கோணும்' எண்டு மல்லுக்கட்டுற பிரதேசசபையள், இப்பிடி வயல்காணியள் எல்லாம் மேட்டுக்காணியா மாறுறதைக் கண்டும் காணாதமாதிரி இருக்கிறதுதான் பெரும் அதிசயம்.**

**வயல்காணியளை மேட்டுக்காணியா மாத்துறதே தனிக்கலைதான். முதலில அந்தக் காணிக்குள்ள வேற இடங்களில இருந்து பழைய கட்டடங்களை இடிச்ச மக்கி, கல்லு, கட்டடத்தூள் எல்லாம் கொண்டந்து கொட்டுவினம். 'என்ன கண்டு வைச்சாலும் நல்லா விளையிற காணிக்குள்ள ஏன் கட்டட இடிபாடுகளைக் கொண்டந்து கொட்டியிருக்கினம்?'எண்டு அதைப் பாக்கிறவை யோசிப்பினம். ஒவ்வொருநாளும் அந்த இடிபாடுகளைக் கொட்டுறது கூடிக்கொண்டே இருக்கும். பிறகு திடீரெண்டு 'ஜே.சி.பி.' மிஷின் அந்த வயலுக்க இறங்கி நிண்டு கதகளி ஆடும். அந்த ஆட்டத்தில இடிபாடுகள் எல்லாம் நொருங்கி மட்டமாகிடும். அதுக்குப் பிறகு வேற காணியளில இருந்து மண்ணை அள்ளியந்து டிப்பர்க்கணக்கில கொட்டுவினம். அதை அமத்தவும் இன்னொருநாள் 'ஜே.சி.பி.' வரும். பிறகு அது வயல்காணிக்குப் பக்கத்தில இருக்கிற மேட்டுக் காணி எண்டு எல்லாரையும் நம்பவைச்சோ இல்லாட்டி அவையின்ர பொக்கற்றுக்க காசைவைச்சோ தேவையான அனுமதி எல்லாத்தையும் எடுத்துப்போடுவினம். நாலைஞ்சு மாதத்துக்குள்ள அந்தக் காணி கட்டடமா மாறும். பிறகு தொற்று வியாதிமாதிரி பக்கத்துக் காணியும் மேடாகி பிறகு வீடாகும். இப்பிடியே அந்த நீளத்துக்கும் நடக்கும்.**

**இப்பிடி வயல்காணிக்குள்ள கட்டடம் கட்டுறதுக்கு அனுமதி குடுக்கக்கூடாது எண்டது சட்டம். ஆனால் அந்தச் சட்டத்தை எப்பிடி வளைக்கிறது எண்டு கட்டடம் கட்டிறவைக்கு நல்லாவே தெரியும். வடமராட்சியில, கரவெட்டிப் பிரதேச சபைக்கு உட்பட்ட வயல்காணியளில இப்பிடிக் கட்டடம் கட்டுற வேலை இப்ப அமோகமா நடக்குது. செத்தவீட்டுக்கு றோட்டில பந்தல் போட்டதுக்கே துள்ளியடிச்சுக்கொண்டு போய், அதைப் பிடுங்கியெறியிற அளவுக்கு கடமையில கண்ணா இருக்கிறவர்தான் அந்த சபைக்குச் செயலாளரா இருக்கிறார். அவருக்கோ இப்ப புதிசா அந்தச் சபையில ஆட்சியமைச்சிருக்கிறவைக்கோ இப்பிடி வயல்காணியளுக்குள் கட்டடங்கள் எழும்பிறது தெரியாமல் இருக்குதெண்டதை நம்பேலாமல் கிடக்கு. ஏனெண்டால் இவையள் அனுமதி குடுக்காமல் எப்பிடிக் கட்டடம் கட்டமுடியும்? கண்ணைமூடிக்கொண்டு வயல்காணியளுக்க கட்டடம் கட்டினால் பிறகு தோட்டம் செய்யிற காணியள் எல்லாமே காணாமல் போயிடும். அதுவும் இவைக்குத் தெரியும். இனியாவது கண்ணைத் திறந்து உதுகளைக் கவனிப்பினமோ?**

-பட்சி


padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்

21 • 10 • 1955



மறைவு

27 • 07 • 2025

## நல்லையா ஜெயவீரசிங்கம் (தங்கன்)

**(பிரபல தொழிலதிபர் - SNJ Travels, SNJ Transport மற்றும் SNJ Group (Sri lanka) and Thirumalaiyan Tours and Travels (India))**

கரணவாய் வடக்கு நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி மற்றும் சென்னை இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா ஜெயவீரசிங்கம் (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - செல்வராணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், வளர்மதி (மதி) யின் ஆசைக்கணவரும், வதனா (லண்டன்), நிருபனா (இந்தியா), மதுஜா (கனடா), சிந்துஜன் (லண்டன்), கோபிகா (லண்டன்), ராதிகா (பிரான்ஸ்), கீர்த்திகா (கொழும்பு), வகீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருவருட்செல்வன் (லண்டன்), ராஜ்குமார் (இந்தியா), நிருபாகரன் (கனடா), கீர்த்திகா (லண்டன்), சர்வானந்தராஜா (பிரான்ஸ்), பிரபாகரன் (கொழும்பு), ரஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிஷ், தர்வின், பிரதன்யா, நேகா, விகானா, கிவ்யா, நிரோகா, சாருஜன், சிவானுஜன், தருணிகா, சஞ்சனா, ஹரிகரன் ஆகியோரின் பேரனும், விஜயராணி (பிரான்ஸ்), ராஜேஸ்வரி (கனடா) காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், தர்மகுலசிங்கம் மற்றும் சோதிமலர் (வவுனியா), பத்மராணி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவநாதன், பாலசுப்ரமணியம் மற்றும் மங்கையகரசி, விஜயலட்சுமி, நகுலேந்திரராஜா, கணேசன், காலஞ்சென்ற நடராஜா மற்றும் இரஞ்சிதமலர், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, கனகலிங்கம், பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் கண்டி வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**

**நிருபனா - 077 379 7127 (மகள்)**
**ராஜ் - 077 693 3255 (மருமகன்)**
**பத்மராணி (பேபி) - 077 071 9437 (சகோதரி)**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 45672) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அறிவுத்திறனின் உண்மையான அடையாளம் அறிவு அல்ல கற்பனைத்திறனே!

– அல்பேர்ட் ஐன்ஸ்டீன் –

# கொலைகார டிப்பர்களும் நாணயக்கயிறும்

மீண்டுமொரு டிப்பர்க்கொலை கிளிநொச்சியில் நடந்திருக்கிறது. வீதியில் தன்பாட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரை பின்னால் வந்த டிப்பர் மோதித்தள்ளி, அந்தப் பெண்ணின் உயிரை அந்த இடத்திலேயே காவுவாங்கி இருக்கிறது. அதன் பின்னர் டிப்பர்ச்சாரதி பொதுமக்களால் தாக்கப்பட்டநிலையில், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். இன்னும் சில தவணைகளில் அவர் பிணையில் விடுவிக்கப்படுவார். அதன் பின்னர் பழைய படி அவர் டிப்பரைச் செலுத்தத் தொடங்குவார். ஆனால் நேற்றுப் பறிபோன அந்தப் பெண்ணின் உயிரை எவர் தருவார்? எல்லோரும் அந்த விபத்தை சிலநாள்களில் மறந்துவிட்டு அவரவர் வேலைகளில் மூழ்கிவிடுவோம். மிஞ்சிப்போனால் டிப்பர்க்கொலைக்கு எதிராக சமூகவலைத்தளங்களில் ஓரிருநாள்கள் பொங்கித் தள்ளிவிட்டு அடங்கிவிடுவோம். பின்னர் இன்னுமொரு நாளில் இன்னுமொரு டிப்பர் இன்னும் சில உயிர்களைக் காவுகொள்ளும்போது, இதே போன்று பொங்குவதும் மறப்பதுமாகவே எமது வாழ்வியல் நகர்கின்றது.

டிப்பர்கள் யமதூதர்களாக மாறி வெகுகாலமாகிவிட்டது. அவை தமக்கென வரையறுக்கப்பட்ட வேகத்தில் ஒருபோதும் பயணித்ததில்லை. இலங்கையின் வீதிகளில் டிப்பர்கள் 40 கிலோமீற்றருக்கும் அதிகமான வேகத்தில் செல்லக்கூடாது என்பதுதான் விதி. ஆனால் காப்பெற் வீதிகளில் மட்டுமல்லாது குச்சொழுங்கைகளில் கூட மின்னல் வேகத்தில்தான் டிப்பர்கள் சென்று மறைகின்றன. உலோக அரக்கனான டிப்பர் சாதாரண வேகத்தில் வரும்போது மோதினாலே பெரும் அனர்த்தம் ஏற்படும் நிலையில், அவற்றின் மிகைவேகம் சேதாரத்தை இன்னும் அதிகமாக்கி, உயிர்க்கொலைகளைச் சர்வசாதாரணமாக நிகழ்த்திவிடுகின்றது. அத்தோடு எல்லா வீதிகளிலும் டிப்பர் போன்ற கனரக வாகனங்கள் பயணிக்க முடியாது என்கின்ற சட்டம் இங்கு பலருக்கும் தெரிவதில்லை. அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட வீதிகளில் மட்டுமே டிப்பர்கள் உலாவரமுடியும். ஆனால் இங்கு அப்படியா நடக்கின்றது? ஒற்றையடிப்பாதையால்கூட டிப்பர்கள் நிதமும் சென்றுவருகின்றன. அதைவிட அதிகளவான சுமைகளோடு, பெருவாரியான டிப்பர்கள் தொடர்ச்சியாகச் சென்றுவருவதால், காப்பெற் வீதிகளின் கரையோரங்கள் அதிவிரைவாகவே சேதமடைந்து அவ்வீதிகள் பயணத்துக்கு ஒவ்வாதவையாக மாறிவிடுகின்றன. எறும்பு ஊரக் கல்லும் குழியும் என்கின்றபோது, டிப்பர் விரைகின்றபோது அவை குழிகளாக மாறாமல் என்னதான் செய்யும்? இப்படி டிப்பர்களால் சிதைக்கப்பட்ட வீதிக்கு நல்ல உதாரணம், தனங்களப்பிலிருந்து பூநகரி வரையான ஏ-32 வீதியும், பூநகரியில் இருந்து பரந்தன் வரை செல்கின்ற வீதியும் தான். இவற்றின் கரையோரம் டிப்பர்களின் பாரத்தையும் வேகத்தையும் தாங்கமுடியாமல் வாய்பிளந்து பள்ளமாகி, பயணிக்க முடியாத பகுதிகளாக மாறிவிட்டன.

இப்படி எந்தப்பக்கம் பார்த்தாலும் நாசத்தை விளைவிக்கும் டிப்பர்களுக்கு 'நாணயக்கயிறு' கட்டி, அவற்றின் வேகத்துக்கும், மனித உயிர்களைக் காவுகொள்ளும் தாகத்துக்கும் தடைபோடவேண்டியது அவசரமும், அவசியமானதுமான பணியாகும். சனநடமாட்டம் அதிகமுள்ள பகல்வேளைகளில் டிப்பர்கள் செல்வதற்குத் தடைவிதிக்கவேண்டும், இரவில் அவை பயணிக்கும் போது 40 கிலோமீற்றர் வேகத்துக்குள் மாத்திரமே செல்லலாம் என்ற கட்டுப்பாட்டை இறுக்கமாகப் பேணவேண்டும். இவற்றை மீறும் டிப்பர்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்படவேண்டும். டிப்பர்களால் விபத்து உண்டானால், சாரதிகளின் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படுவதோடு, டிப்பர்களும் கையகப்படுத்தப்படவேண்டும். இப்படியெல்லாம் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றைச் சிரிவரக் கண்காணித்தால் ஓரளவுக்கேனும் டிப்பர்களின் சண்டித்தனங்களையும், அவற்றின் கொலைப்பயணங்களையும் குறைக்கமுடியும். உரியவர்கள் ஆவன செய்வார்களா?




# போர்க்காலத்தில்கூட இல்லாத வீதி விபத்து உயிரிழப்புகள்!



வடக்கு ஆளுநர் கவலை

யாழ்ப்பாணம், ஓக.1

**போர்க்காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளையும், அங்கவீனங்களையும்விடத் தற்போது வீதி விபத்துகளால் அதிகளவு இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஒழுங்கமைப்பில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குன்றும்குழியுமாக எமது வீதிகள் இருந்தபோது இவ்வாறான விபத்துகள் நடக்கவில்லை. தற்போது காப்பெற் வீதியாக மாறியுள்ளநிலையில் விபத்துகள் சடுதியாக அதிகரித்துள்ளன. மனதைப் பாதிக்கின்ற, நெஞ்சை உலுக்குகின்ற எத்தனையோ விபத்துகள் நடக்கின்றன. பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் செல்பவர்கள் வீதி விபத்துகளில் உயிரிழப்பதால் ஏற்படும் நிலைமையை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எனவே வீதி விபத்துகளைத் தணிப்பது என்பது உங்கள் ஒவ்வொருவரதும் நடத்தையில் தான் தங்கியிருக்கின்றது - என்றார். (ச-25, 66, 113, 159)

## மீனவர்களுக்கு காப்பீட்டுத் திட்டம்


கொழும்பு, ஓக. 1

கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்குக் காப்பீட்டுத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாதகமான வானிலை அல்லது காலநிலை காரணமாகவோ அல்லது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது ஏற்படக்கூடிய திடீர் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்பு அல்லது இயலாமைக்காக இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 2000 ரூபா என்ற கட்டணத்தில் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின்கீழ், திடீர் மரணம் ஏற்படுமாயின் 1.2 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்படவுள்ளது என்றும் விவசாயம் மற்றும் கமநலக் காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## கடந்த 3 வருடங்களில் 20,000 மாணவர்கள் இடைவிலகல்



கற்றல் நடவடிக்கைகளிலிருந்து கடந்த மூன்று வருடங்களில் 20 ஆயிரம் மாணவர்கள் இடைவிலகினர் என்று கல்வி உயர்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். புதிய கல்வி மறுசீரமைப்பு யோசனைகள் தொடர்பாக அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தும் கூட்டத்திலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார். நாளாந்தம் பாடசாலை நேரத்தில் 50 வீத மாணவர்களே வகுப்பறையில் இருக்கின்றனர். அடுத்த வருடத்தில் தரம் ஒன்றுக்கும் தரம் 6க்கும் புதிய பாடவிதானங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் புதிய இலக்குகளை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (ச-இ)

## பொலிஸ் சேவையில் பெண்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஓக.1

பொலிஸ் சேவையில் ஆயிரம் பெண் உத்தியோகத்தர்களை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.


5,000 பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்காணல்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.V.M இன் ஸ்தாபகருக்கு 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 • 12 • 1923



மறைவு
16 • 08 • 2010

## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

காலம் சலனமற்று நகர்ந்தாலும், உங்கள் நினைவு என்றும் சாகாவரம் பெற்றது. S.V.M எனும் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த மாபெரும் தலைவனுக்கு, இன்று பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி!

வியாபார உலகின் விடிவெள்ளியே, உங்கள் தூரநோக்கு பார்வையும், அசராத உழைப்பும் தான் S.V.M இன்று அடைந்திருக்கும் உயரங்களுக்குக் காரணம்.

வர்த்தக உலகில் நீங்கள் வகுத்த பாதைகள் பல தன்னம்பிக்கை விதைகளையிட்டு, திறமையால் பல விருட்சங்களை உருவாக்கிய சிற்பி நீங்கள்.

வெறும் கற்களை அடுக்காமல், கனவுகளுக்கு உயிர் கொடுத்தீர்கள். ஒவ்வொரு அடியிலும் புதுமையை புகுத்தி,வர்த்தக உலகில் S.V.M ஐ தனித்துவமாக்கினீர்கள்.

இன்று உங்கள் பெயரைச் சொல்ல பல நிறுவனங்கள் தலை நிமிர்ந்து நிற்கின்றன. உங்கள் உழைப்பின் மகத்துவத்தை அவை உலகிற்கு உணர்த்துகின்றன.

நீங்கள் விதைத்த ஒவ்வொரு விதையும், இன்று பெரும் விருட்சமாய் உயர்ந்து நிற்கிறது. உங்கள் தூரநோக்கு சிந்தனையும், அர்ப்பணிப்பும் தான் அதன் ஆணிவேர்.

சாதனைகளைத் தேடிய நீங்கள், தடைகளைக் கண்டதில்லை. உங்களது கடுமையான உழைப்பும், அபாரமான துணிச்சலும், இன்றும் பலருக்குப் பாதையாக இருக்கிறது.

நீங்கள் ஏற்றிய தீபம், இன்றும் S.V.M இன் பாதையை பிரகாசமாக்குகிறது. பலரின் வாழ்வில் ஒளியேற்றி, வளங்களைச் சேர்த்த வள்ளலே, உங்கள் புகழ் என்றென்றும் நிலைக்கும்.

நீங்கள் கண்ட கனவுகள், இன்று நிஜமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. S.V.M உங்கள் பெயர் சொல்லும் நிறுவனங்கள், தலைநிமிர்ந்து நிற்கின்றன, உங்கள் பெருமையை பறைசாற்றுகின்றன.

**மரணத்தால் உங்கள் உடல் மறைந்தாலும், S.V.M இன் ஒவ்வொரு வெற்றியிலும், உங்கள் ஆத்மா வாழ்கிறது. உங்கள் ஆன்மா சாந்தியடையட்டும்!**

### S.V.M Enterprices (PVT)LTD

288, A9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி

### S.V.MURUGESU

IMPORTERS, GENERAL MERCHANTS & CONSIGNMENT AGENT
NO. 154. HOSPITAL ROAD, JAFFNA.
svmmurugasugunaratnam@yahoo.com
TEL: 021-4925831/021-2228899
FAX: 021-2228899

### S.V.M.(PVT) LTD

NO. 122. DAM STREET, COLOMBO-12.
TEL: 011-4378678
011-2424392
FAX: 011-2424391
svm-sugar@hotmail.com

**S.V.M Fuel Mart**
No.173, 175, Palaly Road,
Thirunelvely.

**S.V.M Rice Mill**
Power House Road,
Chunnakam.

**உரிமையாளரும் ஊழியர்களும்**

(CS/45677) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளராக வெ.சக்திவேல் நியமனம்



யாழ்ப்பாணம், ஓக.1

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சினால் ஜனவரி 2025 இல் நடத்தப்பட்ட மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் மொறட்டுவ பல்கலைக்கழக, கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆங்கில வருகை நிலை விரிவுரையாளர் வெற்றிவேல் சக்திவேல் சித்தியடைந்துள்ளார். இதன்மூலம் மல்லாக மாவட்ட நீதிபதி பெ. சிவக்குமார் முன்னிலையில் அரச அங்கீகாரம் பெற்ற சத்திய மொழிபெயர்ப்பாளராக நேற்றுமுன்தினம் புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர். யாழ். பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய பொதுக் கலைமாணிப் பட்டம்,சித்த வைத்திய சத்திரசிகிச்சைமாணி, முதுகலைமாணி, முதுவிஞ்ஞானமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25)

# பாடசாலை பஸ்சேவை சீரில்லை; பருத்தித்துறை டிப்போ அலட்சியம்!

## பரீட்சைக்குத் தோற்றமுடியாமல் மாணவர்கள் அந்தரிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 1**

**பருத்தித்தித்துறை இ.போ.ச. சாலையினரால் மேற்கொள்ளப்படும் மாணவர்களுக்கான பாடசாலை பஸ் சேவையின் சீரற்றநிலை காரணமாக பரீட்சை எழுதமுடியாமல் பல மாணவர்கள் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி தினமும் காலையில் பாடசாலைச் சேவையினை பருத்தித்தித்துறை இ.போ.ச.சாலையினர் நடத்திவருகின்றனர். கல்லுவம்பகுதியிலிருந்து புறப்பட்டு நவிண்டில், வதிரிச்சந்தி, திக்கம் ஊடாக பருத்தித்துறை நகரப்பகுதியில் இருக்கும் பாடசாலைகள் வரை இடம்பெறும் இந்த பஸ்சேவையை நம்பியே ஏராளம் மாணவர்கள் உள்ளனர். ஆயினும் இந்த பஸ் சேவை சிலவேளைகளில் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவும், பலமுறை நேரம் தாண்டியும் வருவதால் மாணவர்கள் உரியகாலத்துக்குள் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலையும், பஸ்ஸைத் தவறவிடவேண்டிய நிலையும் ஏற்படுகின்றன.தற்போது பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நடைபெறும் காலத்தில்கூட இந்த பஸ்சேவை மிகத்தாமதமாகவே வருவதால் , மாணவர்கள் பலரும் பாடசாலைகளுக்கு உரியவேளையில் செல்லமுடியாத நிலை ஏற்படுவதோடு, பரீட்சை ஆரம்பித்த பின்னரே அதில் தோற்றவேண்டியுமுள்ளது. பஸ் மிகத்தாமதமாக வருவதால்,அதன் பின்னர் பாடசாலைக்குச் சென்றால் பரீட்சைக்கும் தோற்ற முடியாது என்பதோடு, தாமதமாக வந்தமைக்குத் தண்டனையும் பெற வேண்டியிருக்கும் என்பதால் குறித்த சேவையை நம்பியிருக்கும் மாணவர்கள் அன்றைய தினங்களில் பாடசாலைக்கு செல்லாமலும் விடுகின்றனர் எனப் பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே குறித்த சேவையை சரியான நேர அட்டவணைப் பிரகாரம் சீராக நடத்த உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்களும், பெற்றோரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ, சி, 23)

## அரசியற்...

குரலற்றவர்களின் குரல் அமைப்பினரிடமும், அரசியற்கைதிகளின் உறவினரிடமும் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கும், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசியற்கைதிகளின் உறவினர்களுக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இதன்போதே, நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட அரசியற் கைதிகளின் உறவுகள், '15 முதல் 30 வருடங்கள் வரை எமது உறவுகள் சிறைகளுக்குள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். இதனால் நாங்கள் எதிர்கொண்டுள்ள உளவியல், சமூக மற்றும் பொருளாதார சவால்கள் மிகப் பெரியவை. எனவே, தற்போதைய அரசாங்கமாவது, எங்களின் அன்புக்குரியவர்களை விரைவாக விடுதலை செய்ய வேண்டும்' என்று அமைச்சரிடம் கூட்டாக் கோரிக்கை விடுத்தனர்.

'இலங்கையின் இன முரண்பாடுகளால் உருவான போரின் விளைவுகளான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில், மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது அவசியமாகும். கடந்தகாலத்தில், இலங்கை - இந்திய ஒப்பந்தம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள், ஜே.வி.பி.க்கு பொது மன்னிப்பு, மற்றும் போருக்கு பின்னர் 12 ஆயிரம் விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டமை இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். இந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு, பல வருடங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகளை மனிதாபிமான ரீதியில் விடுவிக்க வேண்டும்' என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பும் அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவிடம் கோரியது.

இதையடுத்து, அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்ததாவது:-

'அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பில் முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளை நான் காதுகளால் கேட்கவில்லை. மாறாக இதயத்தால் கேட்கின்றேன். சட்ட கட்டமைப்புக்குள் இருந்து இந்தப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கைஎடுக்கப்படும். அரசியற்கைதிகளின் பொதுமன்னிப்பு சார்ந்த விடயங்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருகின்றமையால், ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசென்று தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' - என்றார். (அ-ம-26-20)

## மூன்று...

காணப்பட்ட என்புத்தொகுதிகளுடன் சேர்த்தால் இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 118 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நேற்று மூன்று என்புத்தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில், இதுவரை மீட்கப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 105 ஆக அதிகரித்துள்ளது.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவா தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான ஞா.ரனித்தா, சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செம்மணிப்...

யில், வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்படும் ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம், பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கு பாதுகாப்பு அமைச்சு இன்னமும் அனுமதி வழங்கவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைப்பதற்குத் தாமதப்படுவதால், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்கானரை யாழ்ப்பணப் பல்கலைக்கழகத்தின் ஊடாகப் பெற்றுப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஸ்கானர் தற்போது கிடைத்துள்ள நிலையிலேயே, நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் எதிர்வரும் திங்கட்கிழமையும் அங்கு ஸ்கான் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## பரு. நகர...

துறையைச் சேர்ந்த தங்கராசா செல்வபாலன் (வயது -45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். இதன்போதே, அவர் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100)


## மரண அறிவித்தல்



"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் அருக்கிறேன். உன்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் யோவான் 11:25"

### திரு. சின்னையா தேவராஜா

மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும். கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னையா தேவராஜா அவர்கள் நேற்று (31.07.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற திரு. வைத்தியர் சின்னையாவின் அன்பு புதல்வரும். திருமதி. சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் என்பதை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (01.08.2025) இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபொற்று. இறுதி ஊர்வலத்துடன் தாவடி பொது மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

### ஏலம் கோருவது தொடர்பான அறிவித்தல் -2025

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான ஏலம் கோரப்படவுள்ளன.

- ஏலம் கோரவுள்ள திகதி :- **07.08.2025** முற்பகல் **10.00** மணிக்கு
- ஏலம் கோரப்படவுள்ள இடம் : - நானாவித இறைவரி பகுதி
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் , நிபந்தனைகள், வரைபடம் என்பன தொடர்பாக மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் அறிந்து கொள்ளமுடியும் .

வி.மதிவதனி
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கொடை



யாழ்ப்பாணம், ஓக.1

அமரர் தவபாலன் கிரிதரனின் பிறந்தநாள் நினைவை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் குருதிக்கொடையாளர்களை கலந்துகொண்டு குருதிக்கொடையை வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-41-66-100)

## வலயக்கல்வி அலுவலகம் - தீவகம்
### அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

தீவக வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவிவெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | வெற்றிடம் ஏற்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க பாடசாலை | Type -III | 2025.07.25 |

மீள் விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்

| இல | பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | வெற்றிடம் ஏற்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01. | யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் | Type -II | 2024.12.31 |
| 02. | யா/வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயம் | Type -III | 2024.11.26 |
| 03. | யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம் | Type -III | 2024.03.28 |
| 04. | யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | Type -II | 2025.06.26 |
| 05. | யா/சரவணை சின்னமடு றோ.க.த.க பாடசாலை | Type -III | 2025.06.30 |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்.**

- விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்
- Type - II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் - II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இலங்கை அதிபர் சேவை தரம் II இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பம் கிடைக்கப் பெறாத விடத்து மட்டும் அல்லது தெரிவுகள் எவையும் இடம்பெறாவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம் -III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.
- Type - III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப்பிரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 2025.08.18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம்,குறிகட்டுவான் வீதி, வேலணை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

**தி.ஞானசுந்தரன்**
**வலயக்கல்வி பணிப்பாளர், தீவகம்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 06 . 1940

மறைவு 31 . 07 . 2025

### அப்புக்குட்டி வேலாயுதப்பிள்ளை (ராசா)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி வேலாயுதப்பிள்ளை (ராசா) அவர்கள் நேற்று (31.07.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குஞ்சரம் (குணம்) அவர்களின் அன்புக் கணவரும், ரேணுகாவின் பாசமிகு தந்தையும், வைத்திலிங்கம் சங்கரின் பாசமிகு மாமனாரும், நிரோசன், நதீசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**நாவாந்துறை** (CS/58995) J-1 **குடும்பத்தினர்**

## காணவில்லை



கடந்த திங்கட்கிழமை (28.07.2025) செ.இராசமணி (தவராசா) என்பவர் மாலை 03 மணிக்குப் பின்னர் உடுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து வெளியே சென்றுள்ளார். 80 வயதுடைய இவர் முதுமையும், மனநலம் பாதிக்கப்பட்ட வருமாகையால் இவரைக் கண்டவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 208 7193, 077 656 7752**

## கேள்வி கோரல் அழைப்பு
### ஆதார சித்த மருத்துவமனை, பம்பைமடு, வவுனியா
### சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு வழங்கல் - 2025/2026

1. ஆதார சித்த மருத்துவமனை, பம்பைமடு, வவுனியா இனது சிற்றுண்டிச் சாலையினை வாடகைக்கு வழங்குவதற்காக சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாண பெறுகைக் குழுவினால் தகுதியான, தகமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்கலிற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாணம் இலக்கம்.572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தமிழ் மொழியில் உள்ள கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக செலுத்தி அலுவலக நாட்களில் 01.08.2025 தொடக்கம் 14.08.2025 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
3. பெறுகை கோரப்படும் சேவைகளிற்கான வாடகைக் காலம் ஒப்பந்த திகதியிலிருந்து ஒரு வருடம் ஆகும்.
4. விலைக்கேள்விகள் 15.08.2025 ந் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக "தலைவர், பெறுகைகள் குழு, சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாணம், 572/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது திணைக்களத்தின் கணக்குப் பகுதியில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியிலோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
6. பெறுகை வைப்புப் பணமாக ரூபா 20.000.00 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய வழங்கப்படல் வேண்டும். இதற்குரிய கால எல்லையாக 15.08.2025 - 05.12.2025 வரை காணப்படும்.
7. செயலாற்றுகைப் பிணையாக ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது சிற்றுண்டிச்சாலை வாடகைக்குரிய மூன்று மாத கால வாடகைப்பணம் செயலாற்றுகைப் பிணையாக செலுத்தப்படல் வேண்டும். செலுத்தப்படும் மூன்று மாத கால வாடகைப்பணம் ஒப்பந்தம் காலாவதியான பின்னே மீளளிப்புச் செய்யப்படும். எக்காரணம் கொண்டும் பிணைப்பணம் மாத வாடகையாகக் கழிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.
8. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பொது சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாணம் (தொலைபேசி இல. 021-222-0824) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**சுதேச மருத்துவ திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்**

(CR 45673) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 02 . 1972

மறைவு 29 . 07 . 2025

### அமரர் நடராசா எழிலரசி

வவுனியாவை பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நடராசா எழிலரசி (நூலகர், உசன் பண்டிதர் சரவணமுத்து நூலகம்) அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை (29.07.2025) இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான நடராசா - பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், யோகேந்திரன், புகழ்வதி, இரவீந்திரன், பாலேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராஜா, வாசுகி, சோபனா, ரூபறஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2025) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் உசன் ஈச்சங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**சகோதரி - செ.புகழ்வதி (சாந்தி)**
**074 338 4553**

(CR 45671) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்மாமன்வழியில்எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிற்பகலுக்கு மேல் சிலருக்குப் புதிய நண்பர்களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியமான பிரமுகர்களின்சந்திப்புமகிழ்ச்சிதருவதாக இருக்கும்.

**கன்னி:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள்அனுகூலமாகமுடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்புஉண்டு. சிலருக்குத்தந்தைவழிஉறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளநேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்குமேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக்கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையுடன்சிறு சிறு விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு. பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன்வாங்கவும்நேரிடும். வெளியூர்ப்பயணங்களைத் தவிர்க்கவும். வீட்டில்சிறு சலசலப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பாராதபணவரவுக்குவாய்ப்புஉண்டு. உறவினர்கள்உங்கள்முயற்சிகளுக்குஆதரவாக இருப்பார்கள். ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

## எரிபொருள்...

இலங்கைப் பெற்றறோலியக் கூட்டுத்தாபனம் தனது மாதாந்த எரிபொருள் சூத்திரத்தைப் புதுப்பித்துள்ளது. எனினும், விலைகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.

இதன்படி, ஒரு லீற்றர் டீசல் 289 ரூபாவாகவும், ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 325 ரூபாவாகவும், ஒரு லீற்றர் 92 ஒக்ரேன் பெற்றோல் 305 ரூபாவாகவும், ஒரு லீற்றர் 95 ஒக்ரேன் பெற்றோல் 341 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் 185 ரூபாவாகவும் தொடர்ந்தும் பேணப்படும். (அ-ம)

## ஊழல்வாதிகளின்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மட்டில் மக்கள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகள் அதிகம். அவற்றில் ஊழல்வாதிகளைப் பிடித்துத் தண்டனை வழங்குவதே பிரதானமானது. கடந்தகாலங்களில் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டார்கள். எரிபொருள் இல்லாமல் பல நாள்கள் வரிசையில் நின்று துன்பப்பட்டனர். மின்சாரம் இல்லை, தொழில்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

கடந்தகால ஆட்சியாளர்களின் கொள்ளைகள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டது. இதனால் அவர்கள் மீது மக்களுக்கு இப்போதும் கோபம் உள்ளது. இதனால்தான் அவர்களுக்குத் தண்டனை வழங்குமாறு மக்கள் எம்மைக் கட்டாயப்படுத்துகிறார்கள். மக்களின் கோபம் மிகவும் நியாயமானது. நாங்கள் சட்டத்தை மதித்து சட்டத்துக்குக் கட்டுப்பட்டே செயற்படுவோம்.

திருடர்கள் எல்லோரும் இப்போது ஒன்றுசேர்ந்து நிற்கிறார்கள். உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைப்பதற்காக அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நின்றதை அவதானிக்கமுடிந்தது. ஆனால், அவர்களால் கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றமுடியவில்லை. சில இடங்களைக் கைப்பற்றியுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. இருந்தாலும் நாங்கள் கொள்ளையடிக்க விடமாட்டோம் - என்றார். (அ-ம)

## தம்பிலுவில்...

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கருணாவின் கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஒருங்கிணைப்பாளருமான கே. புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோர், திருக்கோவில் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பில் சந்தேக நபர்களாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இனியபாரதியின் சகாக்களான முன்னாள் சாரதி செந்தூரன், திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த தொப்பி மனாப் என்றழைக்கப்படும் விக்கினேஸ்வரன், வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சபாபதி மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த யூட் என அழைக்கப்படும் ரமேஸ்கண்ணா ஆகியோரும் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதன்போது, கடந்த 2009ஆம் ஆண்டு ஜூலையில் திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவன் பார்த்தீபன், 2006ஆம் டிசெம்பர் 15ஆம் திகதி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத், 2010ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி ஊடகவியலாளர் பிரதீப் எக்னலிகொட ஆகியோர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு, தம்பிலுவில் மயானத்தில் புதைக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.,

இதனையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைதுசெய்யப்பட்டவர்களை குறித்த மயானத்துக்கு கடந்த இரு தினங்களாக அழைத்துச்சென்று புதைக்கப்பட்ட இடங்களை அடையாளப்படுத்தினார்கள். அந்த இடங்களிலேயே நேற்று அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## யாழ்...

கூடத்தில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே, இவ்வருடத்தின் ஜூன் மாத நிறைவு வரையான காலப்பகுதி வரை 580 வன்முறைகள் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படும் போது கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பிரதேச செயலக ரீதியாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா? என்பதனைச் சகல தரப்பினரும் உறுதிப்படுத்த வேண்டுமென யாழ். மாவட்டச் செயலர் அறிவுறுத்தினார்.

அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பங்களிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டுப் பிரதேச செயலகங்களுடன் இணைந்த வகையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்களும் யாழ். மாவட்டச் செயலரால் வழங்கப்பட்டன. (அ-ம-66-20)

## ஆயுதங்களைத்...

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவிலேயே இந்த அகழ்வுப் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமீல் முன்னிலையில் அகழ்வுப்பணி முன்னெடுக்கப்பட்டது. எனினும், எந்தத் தடயங்களும் மீட்கப்படாத நிலையில், பணிகள் தோல்வியில் முடிந்தன. (அ-ம-113-27)

## வத்திராயனில்...

அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கேரளக் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமையவே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படாத நிலையில், மீட்கப்பட்ட கஞ்சா பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-100-113)

## டிப்பர்...

சந்திரசேகரம் யதுகிரி (வயது-31) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணை, பின்னால் வந்த டிப்பர் முந்திச்செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டுள்ளது. டிப்பரைச் செலுத்திய சாரதி பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டார். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார், பதற்றத்தைக் கட்டுப்படுத்தியதுடன் சாரதியைக் கைதுசெய்தனர். அத்துடன், சடலத்தையும் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். இதன்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் பதற்றநிலை ஏற்பட்டது. மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டதுடன், கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-113)

## மூதாட்டியின்...

அருந்தவரத்தினம் சத்தியானதேவி (வயது 70) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். அவர் நீண்டநாள்களாக சுகவீனமுற்றிருந்தார் என்று மரண விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-26-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாப் பொலிஸ்நிலைய காணியை விடுவித்துத் தருக

## மாநகர முதல்வர் ஜனாதிபதிக்குக் கடிதம்

வவுனியா, ஓக.1

வவுனியா தலைமைப் பொலிஸ்நிலையம் அமைந்துள்ள மாநகரசபைக்குச் சொந்தமான காணியை விடுவிக்குமாறு ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகரசபையின் மாதாந்த அமர்வு முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கடந்த அமர்வில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முதல்வரால் தெளிவுறுத்தப்பட்டது. இதன்போது வவுனியாப் பொலிஸ்நிலையம் அமைந்துள்ள முழு ஆதனத்தையும் விடுவித்து மாநகரசபைக்கு வழங்குமாறு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளதாக முதல்வர் சபைக்குத் தெரிவித்தார். (ச-110)

# சாவகச்சேரியில் விபத்து; இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக.1

சாவகச்சேரியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் பிரதான வீதியில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த குறித்த இளைஞர் முன்னால் சென்ற காரை முந்திச்செல்ல முற்பட்ட போது சாவகச்சேரி நகரை நோக்கிவந்த பேருந்துடன் மோதி தூக்கி வீசப்பட்டு காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-25,9)

**வேலையாட்கள் தேவை**

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள சோடியம் மல்ரி சென்ரர் (Bookshop & Print) இற்கு 20 - 35 வயதிற்குட்பட்ட பெண்கள் வேலைக்கு தேவை.
வேலை நேரம் திங்கள் முதல் சனி வரை (7.30am to 5.30pm), சம்பளம் - 30000/-

**077 794 2469, 076 549 0913**

**நீங்கா நினைவலைகள்**

15ஆம் ஆண்டு 14ஆம் ஆண்டு

பிறப்பு 04.06.1935 பிறப்பு 05.02.1933



இறப்பு 16.08.2010 இறப்பு 30.06.2011

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்**

திதி: பூர்பக்க அட்டமி (01.08.2025)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்
நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா
அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....
நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......
நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா..
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

**அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்**

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (24.06.2025)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?
அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?
வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?
ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போக நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....
உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை
நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!**

மாதகல் மேற்கு,
மாதகல்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மகன் - 077 774 3185

# அறிவொளி முன்பள்ளியின் 'செயற்பட்டு மகிழ்வோம்'

யாழ்ப்பாணம், ஓக.1

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின்கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு யாழ்.வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஓட்டுமடத்தைச் சேர்ந்த அமரர்களான ச.நடராசா, ந.இரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்ப உறவுகளின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூகநிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் இரத்தினராசா ராஜ்கரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி. பி.தர்சினி, யாழ்.மாநகரசபை 10ஆம் வட்டார உறுப்பினர் சே.மதுசிகான், யாழ்.மாநகரசபை உறுப்பினர் ப.வசீகரன், ஜே/88 புதிய சோனகதெரு கிராம அலுவலர் திருமதி த.கீர்த்திகா, ஜே/88 புதிய சோனகதெரு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுதாகரன், ஆறுகால்மடம் அரசடிஸ்ரீஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி சு.நாக லோஜினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

# பூசணிச் செய்கை அதிக விளைச்சல்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்.குடாநாட்டில் இம்முறை காலபோகத்தின்போது பூசணிச் செய்கை அதிக விளைச்சலைத் தந்துள்ளது எனச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய், சங்குவேலிப் பகுதியிலுள்ள தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பூசணிச்செய்கையே அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளது. சந்தையில் ஒரு கிலோ பூசணிக்காய் 80 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (ச-17)

# வைக்கோல் கட்டும் இயந்திர அறிமுக விழா!

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முரசுமோட்டை 2 ஆம் கட்டைப் பகுதியில் வைக்கோல் கட்டும் இயந்திர அறிமுக விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது ஓட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட் வெளிநாட்டு சக்திமான் நிறுவனத்தினர் எளியமுறையில் வைக்கோல் கட்டும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தியதோடு அதன்மூலம் எவ்வாறு இலகுவாக வேலை செய்வது என்பதனை செயன்முறை ஊடாக விளக்கமளித்தனர் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கமக்கார அமைப்பினர் மற்றும் தொழிலதிபர்கள், வங்கி ஊழியர்கள், கிழக்கு மாகாண விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25, 113)

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் மூவர் கைது

கொழும்பு, ஓக.1

காலித் துறைமுக பொலிஸ் பிரிவில் உள்ள மீன்பிடித் துறைமுகத்துக்கு அருகில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், தொடந்துவ மற்றும் சீனக்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 45, 54 மற்றும் 56 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# சுற்றுலாவிகள் எண்ணிக்கை 1.3 மில்லியன் கடந்தது

இந்த ஆண்டு இதுவரை 1.3 மில்லிய னுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 27 ஆம் திகதி வரை மொத்தம் 13 இலட்சத்து 41 ஆயிரத்து 953 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கல்விக் கருத்தரங்கு

சாவகச்சேரி பிரதேசத்தில் வதியும் மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கொன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து பல்கலைக் கழகம் செல்லாத மாணவர்கள், உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கல்வியற் கல்லூரி மாணவர்கள் என அனைவருக்கும் மானதாக இந்த மாநாடு நடைபெறவுள்ளது. முனைவர் சபேசன் சிதம்பரநாதன் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இந்துக்கல்லூரி அதிபர் மாறன் தலைமையில் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-131)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.